RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 350 | டிசம்பர்.20 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## கோரிக்கைகளுக்காக போராடிய நர்ஸ்களை கைது செய்வதா? இபிஎஸ் கண்டனம்



சென்னை, டிச.20.- மீண்டும் பணி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி கைது செய்யப்பட்ட நர்ஸ்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் வலியுறுத்தி உள்ளார்.

அவரது அறிக்கை: திமுக அரசு, 2021ம் ஆண்டு சட்டசபை பொதுத் தேர்தலின்போது நர்ஸ்களுக்கு அளித்த வாக்குறுதி எண் 356ஐ நிறைவேற்றக்கோரியும், கொரோனா காலகட்டத்தில் பணியமர்த்தப்பட்டு, திமுக அரசால் பணிநீக்கம் செய்யபட்ட அனைத்து நர்ஸ்களுக்கும் மீண்டும் பணி வழங்க வேண்டும் உள்ளிட்ட பல வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

நேற்று தமிழக நர்ஸ்கள் மேம்பாடு சங்கத்தின் சார்பாக அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி சென்னை சிவானாந்தா சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான நர்ஸ்கள் கலந்து கொண்டனர்.

நேற்று இரவு 7.30 மணிக்கு போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த சுமார் 1000க்கும் மேற்பட்ட நர்ஸ்களை கைது செய்து அவர்களை பஸ்கள் மூலமாக அழைத்துச் சென்று கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இறக்கிவிட்டனர். இறக்கிவிடப்பட்ட நர்ஸ்கள், கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திலேயே தங்களது கோரிக்கைகள் நிறைவேறாமல் கலையமாட்டோம் எனக் கூறி, திமுக அரசுக்கு எதிரான கோஷங்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டதை தொடர்ந்து, திமுக அரசின் காவல்துறை அவர்களை மீண்டும் கைது செய்து அருகிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்துள்ளனர்.

2021ம் ஆண்டு சட்டசபை தேர்தலின் போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி கடந்த நான்கரை ஆண்டுகளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நர்ஸ்களை உடனடியாக விடுவிப்பதுடன், 2021ம் ஆண்டு சட்டசபை பொதுத் தேர்தலின்போது திமுக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு இபிஎஸ் கூறியுள்ளார்.

## கட்சிப் பொதுக் கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கான இறுதி வழிகாட்டு நெறிமுறைகள்: ஜன.5க்குள் வெளியிட அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு



சென்னை, டிச.20- தமிழகத்தில் அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டங்கள் மற்றும் ரோடு ஷோ—க்கள் தொடர்பான இறுதி வழிகாட்டு நெறிமுறைகளை ஜனவரி 5ம் தேதிக்குள் வெளியிட வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூரில், கடந்த செப்டம்பர் 27ம் தேதி, தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் பலியாகினர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, தமிழகத்தில் அரசியல் கட்சி தலைவர்களின் ரோடு ஷோ நிகழ்ச்சிகளுக்கும், பெபிதுக்கூட்டங்களுக்கும் வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கக் கோரி, தவெக அதிமுக மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சிகளும், மதுரையைச் சேர்ந்த திருக்குமரன், பிரகாஷ் உள்ளிட்ட தனிநபர்களும் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்குகளை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், 23 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், 40க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் கருத்துகளைப் பெற்று, பொதுக்கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து, நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது தமிழக அரசு.

இந்த வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து அதிமுக, தவெக மற்றும் தேசிய மக்கள் சக்திக் கட்சி சார்பில் ஆலோசனைகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அரசியல் கட்சிகளின் ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும் என, அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வழக்கில் விசாரணை முடிவடைந்ததைத் தொடர்ந்து, தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தது, தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, இன்று தீர்ப்பளித்தது.

வழக்கில் இன்று தீர்ப்பளித்த தலைமை நீதிபதி அமர்வு, ரோடு ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்திருந்த கட்சிகள் சார்பில் ஏராளமான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியது.

இந்த ஆலோசனைகளை பரிசீலித்து, ஜனவரி 5 ம் தேதிக்குள் வழிகாட்டு நெறிமுறைகளை அறிவிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதன்பின், வழிகாட்டு நெறிமுறைகளில் ஏதேனும் ஆட்சேபங்கள் இருந்தால், அதுசம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யலாம் எனவும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளனர்

## வங்கதேச வன்முறை எதிரொலி; ஊடக நிறுவனங்களை சேதப்படுத்தி போராட்டக்காரர்கள் அட்டூழியம்

டாக்கா, டிச.20- வங்கதேசத்தில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக போராட்டத்தை தூண்டிய எதிர்கட்சி தலைவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதைக் கண்டித்து அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் குதித்ததால் பதட்டமான சூழல் நிலவி வருகிறது. அந்தவகையில், போராட்டக்காரர்கள் 'டெய்லி ஸ்டார்' மற்றும் 'புரோத்தோம் அலி' உள்ளிட்ட பல வங்கதேச செய்தித்தாள்களின் அலுவலகங்களைத் தாக்கி சேதப்படுத்தினர்.

கர்வான் பஜார் பகுதியில் உள்ள பங்களாதேஷின் முன்னணி ஆங்கில மொழி நாளிதழான 'டெய்லி ஸ்டார்' அலுவலகம் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது, இதனால் பல பத்திரிகையாளர்கள் மற்றும் ஊழியர்கள் கட்டிடத்திற்குள் சிக்கிக் கொண்டனர். 'டெய்லி ஸ்டார்' பத்திரிகையாளரான சைமா இஸ்லாம், ''என்னால் இனி மூச்சுவிட முடியாது. அதிக புகை இருக்கிறது. நான் உள்ளே இருக்கிறேன். நீங்கள் என்னைக் கொல்கிறீர்கள்' என சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

'டெய்லி ஸ்டார்' அருகே உள்ள 'புரோத்தோம் அலோ' என்ற வங்காள மொழி நாளிதழின் அலுவலகமும் தாக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் கட்டடத்தை சேதப்படுத்தி, அதன் முன் தீ வைத்தனர், இதனால் பல பத்திரிகையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சிக்கிக் கொண்டனர். 'நூறுக்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் இரவு 11 மணியளவில் புரோத்தோம் அலோ அலுவலக கட்டடத்தை சுற்றி வளைத்து தாக்கி உள்ளனர்' என நேரில் கண்ட சாட்சி ஒருவர் தெரிவித்தார்.

## பூந்தமல்லியில் மின்சார பேருந்து பணிமனையை திறந்து வைத்தார் உதயநிதி ஸ்டாலின்!



பூந்தமல்லி: டிச.20- பூந்தமல்லியில் மாநகர போக்குவரத்துக்கழகத்தின் மின்சார பேருந்து பணிமனையை இன்று தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து, 125 மின்சார பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்கும் நோக்கில், மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில், சென்னை மற்றும் அதனையொட்டியுள்ள திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட பகுதிகளில் மின்சாரப் பேருந்துகள் இயக்கம் கடந்த ஜூன் 29ம் தேதி முதல் படிப்படியாக இயக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லியில் உள்ள மாநகர் போக்குவரத்துக் கழக பணிமனை, உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் பங்களிப்புடன் சென்னை பெருநகர கூட்டாண்மை திட்டத்தின் கீழ், ரூ.43.53 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்ட மின்சாரப் பேருந்து பணிமனையாக மாற்றப்பட்டுள்ளது.

உரிய கட்டிட உட்கட்டமைப்பு, பேருந்துகளுக்கு மின்னேற்றம் செய்வதற்கு 25 சார்ஜிங் பாயின்ட் அமைப்பு, புதிய மின்மாற்றிகள் பொருத்துதல் மற்றும் தீயணைக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மாற்றப்பட்ட மின்சார பேருந்து பணிமனை திறப்பு விழா மற்றும் ரூ.214.50 கோடி மதிப்பிலான 45 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் என 125 பேருந்துகள் இயக்கம் தொடக்க விழா இன்று காலை நடைபெற்றது.

இதில், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று, புதிய பணிமனையை திறந்து வைத்தார். தொடர்ந்து, அவர் பூந்தமல்லி மின்சார பேருந்து பணிமனையில் இருந்து 125 மின்சார பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். பிறகு, துணை முதல்வர், மின்சார பேருந்தில் ஏறி பயணம் செய்தார்.

இந்நிகழ்வுகளில், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பார்லியில் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு மாற்றான மசோதா வலுக்கட்டாயமாக நிறைவேற்றம்; ராகுல் குற்றச்சாட்டு



புதுடில்லி. டிச.20- பார்லியில் 100 நாள் வேலைத்திட்டம் தொடர்பான ஜி ராம் ஜி மசோதா வலுக்கட்டாயமாக நிறைவேற்றப்பட்டது என காங்கிரஸ் எம்பியும், லோக்சபா எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் குற்றம் சாட்டியுள்ளார்.

மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்திற்கு மாற்றாக கொண்டு வரப்பட்ட, 'விபி ஜி ராம் ஜி' மசோதா, எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு மத்தியில் லோக்சபாவில் நிறைவேற்றப்பட்டது. இது குறித்து ராகுல் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை:

நேற்று இரவு, பாஜ அரசு இருபது ஆண்டுகால மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை ஒரே நாளில் தகர்த்துவிட்டது. 'விபி ஜி ராம் ஜி' மசோதா மறுசீரமைப்பு அல்ல. அது உரிமைகள் அடிப்படையில் வழங்கப்படும் உத்தரவாதத்தை அழித்து, டில்லியில் இருந்து கட்டுப்படுத்தப்படும் ஒரு திட்டமாக மாற்றுகிறது.

கிராமப்புறத் தொழிலாளிக்கு பேரம் பேசும் சக்தியை வழங்கியது. அந்த திட்டத்தில் பயன் அடைந்தவர்களின் ஊதியங்கள் அதிகரித்தன. கிராமப்புற உள்கட்டமைப்பும் உருவாக்கப்பட்டு புத்துயிர் பெற்றது. அந்தச் செல்வாக்கைத்தான் இந்த அரசு தற்போது உடைக்க விரும்புகிறது. 100நாள் வேலைத்திட்டம் பொருளாதாரம் முடங்கி, வாழ்வாதாரங்கள் சரிந்த போது, கோடிக்கணக்கான மக்கள் பசி மற்றும் கடனில் மூழ்குவதிலிருந்து அது தடுத்தது. இது பெண்களுக்குத்தான் அதிகம் உதவியது.

தற்போது புதிய சட்டத்தின் கீழ், பெண்களும், தலித்துகளும், பழங்குடியினரும், நிலமற்ற தொழிலாளர்களும், மிகவும் ஏழ்மையான இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரும்தான் முதலில் வெளியேற்றப்படுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தச் சட்டம் பார்லிமென்டில் வலுக்கட்டாயமாக நிறைவேற்றப்பட்டது.

மசோதாவை நிலைக்குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. கோடிக்கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கும் ஒரு சட்டம், ஆய்வு, நிபுணர் ஆலோசனை மற்றும் பொது மக்கள் கருத்து கேட்பு இல்லாமல் ஒருபோதும் திணிக்கப்பட்டிருக்கக் கூடாது. தொழிலாளர்களைப் பலவீனப்படுத்துவது, கிராமப்புற இந்தியாவின், குறிப்பாக தலித்துகள், இதர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் செல்வாக்கைப் பலவீனப்படுத்துவது, அதிகாரத்தை தன்வசப்படுத்தி கொள்வது பாஜவின் இலக்குகள். இந்த அரசாங்கம் அழிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இந்த நடவடிக்கையைத் தோற்கடிக்கவும், இந்தச் சட்டம் திரும்பப் பெறப்படுவதை உறுதி செய்யவும், தொழிலாளர்கள், பஞ்சாயத்துகள் மற்றும் மாநிலங்களுடன் நாங்கள் துணை நிற்போம். இவ்வாறு ராகுல் கூறியுள்ளார்

## ஆட்சியே முடியப்போகுது... வாக்குறுதி நிறைவேற்றாத திமுக அரசு; அண்ணாமலை கண்டனம்



சென்னை, டிச.20- ஆட்சிக்கு வந்து ஐந்தாவது ஆண்டு முடியப் போகும் நேரத்திலும், செவிலியர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாஜ மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

அவரது அறிக்கை; பணி நிரந்தரம் கோரி, சென்னை சிவானந்தம் சாலையில் போராட்டம் நடத்திய 1,500 க்கும் மேற்பட்ட செவிலியர்களை, மாலையில் கைது செய்து, நள்ளிரவில் கிளாம்பாக்கம் பஸ்ஸ்டாண்டில் கொண்டு போய் விட்டிருக்கிறது திமுக அரசு. இதனால், அதிகாலை நான்கு மணி வரை, கிளாம்பாக்கம் பஸ்ஸ்டாண்டில், செவிலியர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்திருக்கிறார்கள். திமுக அரசின் இந்த அராஜகப் போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறேன். திமுக தனது தேர்தல் அறிக்கை வாக்குறுதி எண் 356 ல், தமிழகம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் மருத்துவர்களும், செவிலியர்களும், பணி நிரந்தரம் செய்யப்படுவர் என்று கூறியிருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து ஐந்தாவது ஆண்டு முடியப் போகும் நேரத்திலும், இந்த வாக்குறுதியை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கொரோனா பெருந்தொற்று காலத்தில், தங்கள் உயிரைக் குறித்துக் கூடக் கவலைப்படாமல், பொதுமக்கள் நலனுக்காக முன்னின்று பணியாற்றியவர்கள் மருத்துவர்களும், செவிலியர்களும். நான்கரை ஆண்டுகளாக, தங்களைப் பணி நிரந்தரம் செய்ய, அவர்கள் கோரிக்கை வைக்காத இடமே இல்லை. ஆனால், திமுக அரசு, அவர்களைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறது. செவிலியர்கள் கேட்பது, ஆட்சிக்கு வருவதற்காக திமுக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத்தான். அவர்களை தலைமைச்செயலகத்தில் சந்தித்து, அவர்கள் கோரிக்கைகளை கேட்டுக்கொள்ளும் அடிப்படை மரியாதையைக் கூட, சுகாதாரத்துறை அமைச்சர் கொடுக்க மறுக்கிறார் என்பது, பொதுமக்களை திமுக எப்படி நடத்துகிறது என்பதற்கு உதாரணம்.

கடந்த 2023ம் ஆண்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 2,472 செவிலியர்களைப் பணிநீக்கம் செய்ததை நாம் கண்டித்துக் குரல் கொடுத்திருந்தோம். தமிழகம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் செவிலியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற செவிலியர்களின் கோரிக்கைக்கு எப்போதும் துணை நிற்போம். செவிலியர்களுக்குக் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை திமுக நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், இரண்டாம் கட்டமாக 50,648 மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது

## இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகள் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துள்ளார்கள்








“தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மகளிருக்கான ஒரு மாபெரும் முன்னெடுப்பாக, மகத்தான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் ஏறத்தாழ ஒருகோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும்” என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 27.03.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.2023 அன்று காஞ்சிபுரத்தில் முதல் கட்டமாக சுமார் 1.13 கோடி பயனாளிகள் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். கலைஞர் மகளிர் உரிமைத் தொகையானது ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி மகளிருக்கே நேரடியாக சென்றடையும் வகையில் அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், மேலும், 16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 மகளிர் பயனடையும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ஆம் கட்ட விரிவாக்கத்தை 12.12.2025 அன்று தொடங்கி வைத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர்க்கு உரிமைத்தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை (கிஜிவி சிணீக்ஷீபீ) வழங்கினார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக கோயம்புத்தூர் வடக்கு சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 40239 மகளிருக்கும், கோயம்புத்தூர் தெற்கு சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 5695 மகளிருக்கும், கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 68137 மகளிருக்கும், சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 24,800 மகளிருக்கும், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 62,113 மகளிருக்கும், சூலூர் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 45,311 மகளிருக்கும், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 50,558 மகளிருக்கும், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 56,627 மகளிருக்கும், பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 34,355 மகளிருக்கும், வால்பாறை சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 37,870 மகளிருக்கும், என மொத்தம் 4,25,705 மகளிருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.510.84 கோடி தொகையானது வழங்கப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து தற்போது இரண்டாம் கட்டமாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த ஜீலை மாதம் முதல் நடத்தப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்களின் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கோரிய 1,74,599 விண்ணப்பங்களை கள ஆய்வு செய்து ஆனைமலை வட்டாரத்தில் 3253 மகளிருக்கு ரூ.3.90 கோடி மதிப்பிலும், அன்னூர் வட்டாரத்தில் 2801 மகளிருக்கு ரூ.3.36 கோடி மதிப்பிலும், கோயம்புத்தூர் வடக்கு வட்டாரத்தில் 12,548 மகளிருக்கு ரூ.15.05 கோடி மதிப்பிலும், கோயம்புத்தூர் தெற்கு வட்டாரத்தில் 5360 மகளிருக்கு ரூ.6.43 கோடி மதிப்பிலும், கிணத்துக்கடவு வட்டாரத்தில் 1547 மகளிருக்கு ரூ.1.85 கோடி மதிப்பிலும், மதுக்கரை வட்டாரத்தில் 5265 மகளிருக்கு ரூ.6.31 கோடி மதிப்பிலும், மேட்டுப்பாளையம் வட்டாரத்தில் 3800 மகளிருக்கு ரூ.4.56 கோடி மதிப்பிலும், பேரூர் வட்டாரத்தில் 4929 கோடி மதிப்பிலும், பொள்ளாச்சி வட்டாரத்தில் 4191 கோடி மதிப்பிலும், சூலூர் வட்டாரத்தில் 6190 மகளிருக்கு ரூ.7.42 கோடி மதிப்பிலும், வால்பாறை வட்டாரத்தில் 764 மகளிருக்கு ரூ.91.68 இலட்சம் மதிப்பிலும் என மொத்தம் 50,648 மகளிருக்கு தற்போது இரண்டாம் கட்டமாக மாதம் ரூ.1000/ வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.5.06 கோடி வீதமும் ஆண்டிற்கு ரூ.60.77 கோடி மகளிர் உரிமைத்தொகை அவர்களது வங்கி கணக்கு மூலம் வழங்கப்பட உள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் முதல் மற்றும் இரண்டாம் கட்டம் என மொத்தம் 4,76,353 மகளிருக்கு மாதம் ரூ.1000/ வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.47.63 கோடி தொகையும், ஒரு ஆண்டிற்கு ரூ.571 கோடி தொகையானது வழங்கப்படுகிறது.

நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பயனடைந்த செட்டிபாளையம் பேரூராட்சியை சேர்ந்த பயனாளி திருமதி .பூமணி அவர்கள் தெரிவித்ததாவது,

என் பெயர் பூமணி. நான் போத்தனூர் செட்டிபாளையம் பேரூராட்சியில் கோனார் வீதியில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் சண்முகம், லாரி டிரைவராக வேலை செய்து வருகிறார். எனக்கு இரண்டு குழந்தைகள். என் பொண்ணுக்கு கல்யாணம் ஆகிவிட்டது. தற்போது என் மகன் மட்டும் எங்களுடன் வசித்து வருகிறான். குடும்பம் ஏழ்மையானது. என்னுடைய அன்றாட செலவிற்குகூட என்னுடைய கணவரிடம் அல்லது மகனிடம் கேட்டு வாங்கவேண்டிய நிலை இருந்தது. இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கலைஞர் உரிமைத்திட்டம்



குறித்து அறிந்து எங்கள் பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கலந்துகொண்டு விண்ணப்பித்தேன்.

தற்போது இத்திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளியாக தேர்வுசெய்யப்பட்டு, ரூ.1000 என்னுடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. என்னுடைய அவசிய தேவைக்கான செலவினை மேற்கொள்ள இந்த தொகை மிகவும் உதவிகரமாக அமைந்துள்ளது. மேலும், விடியல் பயணம் திட்டத்தின் கீழ் கட்டணமில்லா பேருந்து பயணம், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடனுதவி திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மகளிர்களுக்கென்று சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள். எனவே, இத்திட்டத்தின் மூலம் எங்கள் வாழ்வில் ஒளியேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு
**ஆ.செந்தில் அண்ணா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
**இரா.சரண்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
கோயம்புத்தூர் மாவட்டம்.



# மதுரை அல்அமீன் பள்ளியில் “எல்லோரும் எல்லாம் பெறவேண்டும்“ அமைச்சர் பி.மூர்த்தி பேச்சு

மதுரை, டிச.20-

மதுரை கோ.புதூர் அல் அமீன் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான ஜூடோ போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற, ஸ்டெயின் கமலேஷ், நபித் அஸ்லம் மற்றும் வெள்ளிப் பதக்கம் வென்ற ஸ்ரீதர் ஆகிய மாணவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் வணிகவரித்துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு மாணவர்களைப் பாராட்டி பரிசு வழங்கினார். மாணவர்கள் இளம் வயதில் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும், தமிழக அரசு மாணவர்களின் கல்வி மற்றும் விளையாட்டிற்கு துணை நிற்கும், எல்லோரும் எல்லாம் பெறவேண்டும் என்று அமைச்சர் பி.மூர்த்தி வாழ்த்தி பேசினார். தமிழக முதல்வர் மற்றும் மேதகு இந்திய ஜனாதிபதியிடமிருந்து பள்ளிக்காக புத்தகங்கள் பெற்றமையைப் பாராட்டி கையொப்பமிட்டு வாழ்த்து தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து மாணவர்களின் பயன்பாட்டிற்காக புதிய வகுப்பறைக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.


இந்நிகழ்ச்சிக்கு தாளாளர் முகமது இதிரிஸ் முன்னிலை வகித்தார், பள்ளித் தலைமை ஆசிரியர் ஷேக்நபி வரவேற்புரை யாற்றினார். வக்ஃபு வாரியக் கல்லூரி ஆட்சி மன்ற குழு உறுப்பினர் முகமது அப்துல்லா, மேலாளர் காதர் முகைதீன், தொழிலதிபர் பாசில், டாக்டர் முஸ்தாக், சம்சுதீன் மற்றும் கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பதியில் ரூ.35,000 கோடியில் ஆன்மிக நகரம் 1,400 ஏக்கரில் அமைக்கிறது ஆந்திர சுற்றுலா துறை

*திருப்பதி, டிச.20–*

*ஆந்திராவில் 5,000 ஆண்டு இந்து மதக் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில், ரேணிகுண்டாவில் ஆன்மிக நகரம் அமைகிறது.*

*ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆலோசனையின்படி, டெல்லா டவுன்ஷிப் நிறுவனம் திருப்பதியில் ஆன்மிக நகரத்தை உருவாக்க முன்வந்துள்ளது. இந்து மதக் கலாச்சாரத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதே இதன் நோக்கம். சுமார் 5,000 ஆண்டுகள் பழமையான இந்து மதக் கலாச்சாரம் தொடக்கம் முதல் வருங்கால சந்ததியினரும் அறியும் வகையில் இந் நகரம் அமைகிறது.*



*சனாதன தர்மம் என்பது என்ன? அதன் தனித்துவம் என்ன? இதன் நோக்கம் என்ன? இது தோன்றிய வரலாறு, கலாச்சாரம், ஐதீகம், இந்துக்களின் பழக்க வழக்கங்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் எவ்வாறு மாறுபடுகிறது என்பது போன்ற விளக்கங்களுடன் இந்நகரம் பிரம்மாண்டமாக கட்டப்படுகிறது. ராமாயணம், மகாபாரதம் உட்பட பல்வேறு இதிகாசங்கள், இந்து புராணங்கள் இருக்கும் வகையில் இந்த ஆன்மீக நகரம் அமைக்கப்பட உள்ளது.*

*இந்துக்களின் மெய்ஞான அறிவு, சூரியனை சுற்றிதான் கிரகங்கள் சுழல்கின்றன என்ற அறிவு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பஞ்சாங்கத்தை கணித்த திறன், கலாச்சாரம், ஆச்சாரம் போன்றவற்றை தெரிவித்து நாடு முழுவதிலும் உள்ள இந்துக்களை ஒன்றுபடுத்துவதை திட்டமாக கொண்டு இந்த ஆன்மிக நகரம் உருவாக்கப்படுகிறது. இங்கு 300 ஏக்கரில், ‘வாழ்வியல் கண்காட்சி நகரம்’ உருவாக்கப்பட உள்ளது.*

*வேதத்துக்கென தனி கண்காட்சி மையம் அமைக்கப்பட உள்ளது. சாஸ்திரிய கலைகள், கோயில் கட்டுமான பணிகள், ஒவ்வொரு மாநிலங்களிலும் உள்ள சனாதன முறை, ஐதீகம் உள்ளிட்டவையும் தெள்ளத் தெளிவாக தெரிவிக்கப்பட உள்ளன. மேலும் இதில் நம் நாட்டில் உள்ள யூனியன் பிரதேசங்களில் உள்ள கலாச்சாரங்களும் விவரிக்கப்பட உள்ளன. வாழ்வியல் ஆன்மிக நகரத்துடன், பிரம்மாண்டமான ஓட்டல்கள், தனியார் விடுதிகள், வில்லாக்கள் போன்றவையும் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.*

*600 அறைகள் கொண்ட 5 நட்சத்திர ஓட்டலும், மிக பிரம்மாண்டமான திருமண மண்டபங்களும் இங்கு அமைக்கப்பட உள்ளன. இந்த ஆன்மிக நகரம் அமைப்பதின் மூலம் சுமார் 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என ஆந்திர அரசு தெரிவித்துள்ளது. இதில் 80 சதவீதம் உள்ளூர்வாசிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.*



# பழனியில் தென்காசி மங்கம்மாள் அறக்கட்டளை சார்பாக அன்னதானம்

திண்டுக்கல், டிச.20-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தென்காசி மங்கம்மாள் அறக்கட்டளை நிர்வாகிகள் சார்பாக அமாவாசை தானம் கொடுப்பதற்கு சிறந்த நாள். இந்த நாளில் தானம் செய்வது மற்ற நாட்களை விட பல மடங்கு புண்ணியத்தை கொடுக்கும்.

இந்த நாளில் முன்னோரை நினைத்து உணவுப் பொட்டலம் தானம் செய்தால், நம் வீட்டில் இருந்த வறுமை நிலை மாறும். தனம், தானியம் பெருகும். கடன் பிரச்சனையில் இருந்துவஸ்திர தானம் செய்து வேண்டிக்கொண்டால், நம் ஆயுள் அதிகரிக்கும். ஆரோக்கியம் அதிகமாகும். தீராத நோயெல்லாம் தீரும். வாழையடி வாழையென நம் சந்ததி செழித்தோங்கும் திரு ஆவினன்குடி அருகே ஒவ்வொரு அமாவாசை தினத்தன்று 300கும் மேற்பட்ட பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் அன்னதானம் வழங்கி சிறப்பித்து வருகின்றனர் இறைப்பணியில் : தென்காசி மங்கம்மாள் அறக்கட்டளை நிர்வாகிகள்

# பிப். 27ம் தேதி கச்சத்தீவு அந்தோணியார் திருவிழா

*ராமேஸ்வரம், டிச.20–*

*இந்திய, இலங்கை நாட்டினர் சங்க மிக்கும் கச்சத்தீவு அந்தோணியார் ஆலயத் திருவிழா, பிப். 27, 28ல் ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் கச்சத்தீவு திருவிழா நடை பெறுவது வழக்கம். இந்த ஆண்டு கச்சத்தீவில் அந்தோணியார் ஆலயத் திருவிழா பிப். 27, 28ம் தேதி இரண்டு நாட்கள் நடைபெறும் என இலங்கையில் உள்ள நெடுந் தீவு பங்குத்தந்தை பத்தி நாதன் தெரிவித்துள்ளார். பிப். 27ம் தேதி மாலை 4 மணியளவில் கச்சத்தீவில் கொடியேற்றத்துடன் விழா துவங்கும்.*

*தொடர்ந்து திரு ஜெபமாலை, இருநாட்டு மக்களும் சேர்ந்து தூக்கி வரும் சிலுவைப்பாதை நிகழ்ச்சி, நற்கருணை ஆராதனை, இரவு அந்தோணியாரின் சொரூபம் வைக்கப்பட்ட தேர்பவனி நடைபெறுகிறது. பிப். 28ம் தேதி காலை 7.30 மணியளவில் சிறப்பு திருப்பலி பூஜை, கூட்டுப் பிரார்த்தனை, பின்னர் கொடியிறக்கம் நடைபெற்று விழா முடிவடையும். இந்தியாவில் இருந்து எத்தனை பயணிகளை அனுமதிக்க லாம் என்ற அறிவிப்பினை இலங்கை அரசு விரைவில் அறிவிக்கும்.*



■ மதுரை மாவட்ட அகில பாரத ஐயப்ப சேவா சங்க சார்பில் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் வளாகத்தில் அன்னதானம் நடைபெற்றது.



# மதுரை சோழவந்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்த ரூ.4 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்க பணிகள்

மதுரை, டிச.20-

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே இரும்பாடி மற்றும் கருப்பட்டி ஆகிய கிராம ங்களின் வழியாக, மதுரை, வத்தலக்குண்டு, நிலக்கோட்டை, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட பகுதிகளுக்கு அரசு மற்றும் தனியார் பேருந்துகள் சென்று வருகின்றன.அதிக வாகனங் கள் செல்லும் இச்சாலை பல வளைவுகளுடன் ஒரு பேருந்து மட்டுமே செல்லும் அளவில் மிகக்குறுகலாக அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வந்த நிலையில் இருந்தது . இச்சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று, பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் இரும்பாடி பிரிவு முதல் இரும் பாடி பாலம் வரை 2 கிமீ தூரம் சாலை விரிவாக்கம் செய்யப்பட்டது. இதனால் இரண்டு பேருந்துகள் சென்று வரும் நிலை ஏற்பட்டது.

மேலும் மீதமுள்ள இரும் பாடி பாலம் முதல் கருப்பட்டி பிரிவு வரை 3.6 கி.மீ தூர சாலை விரிவாக்கப் பணிகளுக்கான பூமிபூஜையை சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் செய்து பணிகளை துவக்கி வைத்தார்.3.75 மீட்டர் அகலமுள்ள இக்குறுகிய சாலை இனி. 5.5 மீட்டருக்கு நெடுஞ் சாலைத்துறையினரால் அகலப்படுத்தபட்டு சாலை அமைக்கப்படும். பூமி பூஜையின் போது திமுக ஒன் றிய செயலாளர்கள் பால ராஜேந்திரன், பசும்பொன் மாறன், பேரூராட்சி தலைவர்கள் பால்பாண்டியன், ஜெயராமன், நெடுஞ்சாலை துறை உதவி பொறியாளர் கௌதம், சாலை ஆய்வாளர்கள் மஞ்சுநாத், பாண்டி கார்த்திக், துணை செயலாளர்கள் தியாக முத்துப்பாண்டி,ஜெகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் இச்சாலை அமைவதை கண்டு பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலம்2, வார்டு32, என்.ஆர்.கே.புரம் வீதியில் உள்ள வீடுகளில் பொது மக்கள் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து தூய்மை பணியாளர்களிடம் வழங்குவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.




■ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறைமிக சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில் 19.12.2025 இன்று மத்திய பிரதேசம் மாநிலத்தில் நடைபெறும் ஹாக்கி விளையாட்டிற்காக செல்லும் தமிழ்நாடு அணியில் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வீரர்களும் கலந்து கொள்வதை அறிந்து உடனடியாக நேற்று அதிகாலை 5.00 மணிக்கு மதுரை தொடர்வண்டி நிலையத்திற்கு சென்று அனைவரையும் ஊக்கப்படுத்தியும் வாழ்த்துக்களையும் கூறி தாங்கள் No -1 அணியாக வெற்றி பெற்று பதக்கத்துடன் திரும்பி வரவேண்டும் என்று வாழ்த்துகள் கூறி அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் உபகரணங்களை மானாமதுரை எம்எல்ஏ தமிழரசி ரவிக்குமார் வழங்கினார்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் திருப்பூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள புத்தகத்திருவிழானை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜ், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

# மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் புதிய வாக்காளர் சேர்க்கைக்கான வாக்காளர் விழிப்புணர்வு முகாம்

திருப்பூர், டிச.20-

திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் எல்.ஆர்.ஜி.மகளிர் கலைக்கல்லூரியில் புதிய வாக்காளர் சேர்க்கைக்கான வாக்காளர் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையம், 01.01.2026 ஆம் நாளினை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 பணிகள் மேற்கொள்ள கால அட்டவணை வெளியிட்டுள்ளது. அதன்படி, திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி( தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 08 சட்டமன்றத்தொகுதிற்குரிய வரைவு வாக்காளர் பட்டியல் நாளை வெளியிடப்படவுள்ளது. புதிய வாக்காளர் சேர்க்கைக்கான பணிகள் நாளை முதல் தொடங்கி நடைபெறவுள்ளது. படிவம் 6யை பூர்த்தி செய்து புதிய வாக்காளர்கள் விண்ணப்பிக்கலாம். புதிய வாக்காளர் சேர்க்கைக்கான வாக்காளர் விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. 2023ல் 106வது அரசியல் அமைப்பு திருத்த சட்டத்தில் மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் 33 சதவீதம் பெண்களுக்கான இடஒதுக்கீடு உறுதி செய்யப் பட்டது. இச்சட்டம் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.




பெண்கள் ஆகிய நீங்கள் அனைவரும் புதிய வாக்காளர் சேர்க்கையில் படிவம் 6யை பூர்த்தி செய்து வழங்க வேண்டும். 18வயது பூர்த்தியடைந்த அனைவரும் புதிய வாக்காளர் சேர்க்கையில் விண்ணப்பிக்க வேண்டும். தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் முடிக்கப்பட்டு (16.02.2026) அன்று இறுதி வாக்களார் பட்டியல் வெளியிடப்படவுள்ளது. புதிய வாக்காளர்கள் படிவம் 6யை பூர்த்தி செய்து வழங்கும்பொழுது இறுதி வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் பெயர் இடம் பெறும். எனவே, புதிய வாக்காளர்கள் அனைவரும் படிவம் 6யை பூர்த்தி செய்து வழங்க வேண்டும். இவ்வவாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனீஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்கள்.

இம்முகாமில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே கடந்த 18ஆம் தேதி திருப்பூர் மாநகராட்சி, எல்.ஆர்.ஜி.மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற புதிய வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் புதிய வாக்காளர் சேர்க்கை கான படிவம் 6யை கல்லூரி மாணவிக்கு வழங்கினார்கள். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் சரவணன் ஆகியோர் உள்ளனர்.




# RVS பத்மாவதி தோட்டக்கலை கல்லூரி இறுதியாண்டு தோட்டக்கலை படிப்பு மாணவர்கள் கிராம தங்கள் திட்டம் செய்முறை விளக்கம் நடைபெற்றது

தேனி, டிச.20-

தேனி மாவட்டம் கூடலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட லோயர்கேம்பில் அமைந்துள்ள கர்னல் ஜான் பென்னிகுக் மணிமண்டபத்தில் RVS பத்மாவதி தோட்டக்கலை கல்லூரி மாணவர்களுக்கு கிராம தங்கள் பயிற்சியாக கர்னல் ஜான் பென்னிகுக் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் முல்லைப் பெரியார் பற்றியும், மணி மண்டபத்தின் வளாகத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்பாக கிராம தங்கள் பயிற்சி பாடம் பெற வருகை தந்த மாணவர்களுக்கு பனை விதை பற்றி பாடம் எடுத்து அவர்களின் கைகளால் பூமித்தாயின் மடியில் பனை விதை விதைக்கப்பட்டது இன்று அது நல்லபடியாக முளைத்து இலைகள் ஒரு அடிக்கு மேலாக வானத்தைப் பார்த்து வளர்ந்து உள்ளதை அன்பு அறம் செய் அறக்கட்டளையின் இயக்குனர் சுருளிப்பட்டி ரா.அன்பு ராஜா (ஆப்தமித்ரா பேரிடர் கால நண்பன்) இன்று வருகை தந்த மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

"விதை ஆனவனை தூக்கி எறிந்தாலும் மண்ணில் விழுந்தால் மரமாக முளைப்பான் " விதை



■ ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டுவைத்தார்.



# பாரதிய ஜனதா மற்றும் அமலாக்குத்துறையை கண்டித்து தேனி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மெழுகுவர்த்தி கையில் ஏந்தி போராட்டம்

தேனி, டிச.20-

தேனி பழைய பேருந்து நிலையம் அருகே தேனி காங்கிரஸ் சார்பில் தேனி மாவட்ட தலைவர் முருகேசன் தலைமையில் 50 க்கு மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோர்கள் மீது போடப்பட்ட நேஷனல் ஹெரால்டு வழக்கில் நீதி கிடைத்த வெற்றியை போற்றும் வகையிலும் பொய் வழக்கு தொடர்ந்த பாரதி ஜனதா கட்சியையும் அமலாக்குதுறையையும் கண்டித்து கையில் மெழுகுவத்தி ஏந்தி போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் பெண்கள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# கோவை அரசு மகளிர் கல்லூரியில் வினாடி வினா போட்டி

கோவை, டிச.20-

மாண்புமிகு முன்னாள் அமைச்சர் / கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் வி. செந்தில் பாலாஜி அவர்களது வழிகாட்டுதலில், கோவை மாநகர் மாவட்ட திமுக பொறுப்பாளர் துரை செந்தமிழ் செல்வன் மற்றும் பொறியாளர் அணி மாநில செயலாளர் எஸ் கே பி கருணா ஆகியோரது ஆலோசனைப்படி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை மிக சிறப்பாக கொண்டாடும் வகையில்,, திமுக மாநகர் மாவட்ட பொறியாளர் அணி சார்பில், அரசினர் மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கான வினாடி வினா போட்டி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி பொறியாளர் அணி அமைப்பாளர் நா. பாபு தலைமையில், தலைவர் கண்ணதாசன் ணிஜ் .விசி, துணைத்தலைவர் பா.வசந்தகுமார், வைரமணி, ரங்கநாதன், ழிகூஷிஷி செந்தில்குமார், சத்தய மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் அம்பாள்ஷி.கி நந்தகுமார்,திமுக கோவை மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநிலத் துணைச் செயலாளர் மீனா ஜெயக்குமார், திமுக 66 வது வார்டு கவுன்சிலர் முனியம்மாள், வார்டு செயலாளர் நவீன் பாலமுருகன்,இளைஞர் அணி லாரா பிரேம் தேவ்,விஜய் டிவி புகழ் கார்த்திக் ராஜா,மிமிக்ரி அருண் ஆகியோர் கலந்து கொண்டு வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு முதல் பரிசு ரூ.5000, 2வது பரிசு ரூ.3000, 3வது பரிசு ரூ.2000 மற்றும் கேடயங்கள், சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தனர்

நிகழ்ச்சியில் பொறியாளர் அணி பகுதி நிர்வாகிகள் தயாளன் மோகன்ராஜ், கிருபாகரன், கபிலன், ஷியாம், கார்த்திக் தமிழ்ராஜ், கோவிந்தராஜ் ,சிவக்குமார், மகேஷ், லாரன்ஸ், விக்டர் செல்வராஜ் மற்றும் கழக உடன்பிறப்புகள், கல்லூரியின் முதல்வர், ஆசிரியர்கள், மாணவிகள், கலந்து கொண்டனர்

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா

திருப்பூர், டிச.20-

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா நடைபெற்றது.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதி ஐக்கிய நாடுகள் சபை மத ரீதியான, மொழி ரீதியான, இன ரீதியான சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்களின் உரிமை குறித்த சாசனத்தை பிரகடனம் செய்தது. அதன் அடிப்படையிலேயே டிசம்பர் 18 ஆம் தேதியன்று சிறுபான்மையினர் உரிமைகள் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.



திருப்பூர் மாவட்டத்தில் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் 1, 2 மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் மூலம் ரூ.10.00 இலட்சம் நன்கொடையாக வசூல் செய்யபட்டு அத்தொகைக்கு இணைமானியமாக அரசு ரூ.20.00 இலட்சம் வழங்கி வருகிறது. இத்தொகையினை ஆதரவற்ற முஸ்லீம்/ கிறித்துவ விதவைகளுக்கு உதவி செய்தல், பள்ளி/ கல்லூரி மாணவியர்களுக்கு உதவி செய்தல், சிறு தொழில் துவங்க உதவி செய்யப்பட்டு வருகிறது.

இத்துறையின் மூலம் உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியம் 2009 முதல் துவங்கப்பட்டுள்ளது. உலமாக்கள் நல வாரியத்தில் தற்போது வரை 237 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். பதிவு பெற்ற வக்ஃபு நிறுவனங்களில் பணியாற்றும் உலமா பணியாளர்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் மானியத்தில் நபர் ஒன்றுக்கு ரூ.25,000/ மதிப்பில் வாகனம் வாங்க அனுமதிக்கப்படுகிறது. கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம் 2023 முதல் துவங்கப்பட்டுள்ளது. இந்நலவாரியத்தில் 171 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கிறித்துவர்களின் கல்லறைத் தோட்டத்திற்கு மற்றும் முஸ்லீம்களின் கபர்ஸ்தான் ஆகியவற்றிற்கு சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் பாதை புனரமைத்தலுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிறித்துவ தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ள அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலம் தனிநபர் கடன், குழுக்கடன், கல்விக்கடன், கைவினை கலைஞர்களுக்கான கடன் தொகை குறைந்த வட்டி விகித்தில் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

2021-22ஆம் ஆண்டு முதல் சிறுபான்மையினருக்கு மின் மோட்டாருடன் கூடிய விலையில்லா தையல் இயந்திரம் திட்டம் வழங்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் 3ஆம் வகுப்பு முதல் 6ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையினர் மாணவியர்களுக்கு பெண்கல்வி ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 2022-23ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே முஸ்லிம் கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் சார்பில் 37 பயனாளிகளுக்கு ரூ.2.80 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும், 01 நபருக்கு கிறிஸ்துவ தேவலாயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர் நலவாரிய அட்டையினையும் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) பிரபு, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலர் கல்பனா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



# அருள்மிகு எல்லை மாகாளியம்மன் திருக்கோவில் 10ம் ஆண்டு விழா

கோவை டிச.20-
கோவை மாவட்டம் எட்டிமடை பகுதியில் உள்ள அருள்மிகு எல்லை மாகாளி யம்மன் திருக்கோவில் 10ஆம் ஆண்டு விழா மிக கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவில் வேள்வி பணிகளை பேரூர் மணிவாசகர் அருட்பணி மன்றம் குமரலிங்கம் தலை மையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தலைமை அறங்காவலர் சி.கே. கண்ணன் தலைமை தாங்கினார். செயலாளர் எஸ்.பி. அன்பரசன், பொருளாளர் நாகராஜ், அறங்காவலர்கள் ரவி மற்றும் ராமசாமி முன்னிலை வகித்தார்கள்.

10ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு எல்லை மாகாளி அம்ம னுக்கு சிறப்பு அலங்கார பூஜை நடைபெற்றது. தொடர்ந்து பால், தேன், தயிர், சந்தனம், குங்குமம் அபிஷேகங்கள், யாகங்கள், சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து எல்லை மாகாளி அம்மனுக்கு பல சேவைகளை செய்து வரும் கோபால கிருஷ்ணன், சீனிவாசன், ஜெயராம், ரவி, ராமகிருஷ்ணன், சீனிவாச மூர்த்தி, ஜெயந்த் பாலாஜி, பிரேமா, வெங்கடேஷ் ஆகியோர்களுக்கு எல்லை மாகாளியம்மன் திருக் கோவில் நிர்வாகிகள் கௌரவித்தனர்.

அதனைத்தொடர்ந்து தலைமை அறங்கா வலர் சிகே.கண்ணன் கூறுகையில் ஒவ்வொரு வருடமும் ஆண்டு விழாவை ஊர் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் மிகச் சிறப்பாக நடத்தி வருகிறோம். பல்லா யிரக்கணக்கான மக்கள் தங்களது வேண்டுதல்களை எல்லை மாகாளியம்மனிடம் வைக்கிறார்கள். அந்த கோரிக்கைகள் நிறைவே றியவுடன் தங்கள் வேண்டு தல்களை நிறை வேற்றுகிறார்கள்.

மேலும் திருக் கோயிலுக்கு இதுவரை 72பவுன் தங்கம் காணிக் கையாக கிடைக்கப் பட்டுள்ளது.இந்த தங்க காணிக்கை யானது வருங் காலத்தில் அம்மன் கோவிலில் தங்க மேற்கூரை அமைக்க திட்டமிட்டு ள்ளோம் என்று தெரி வித்தார்.

இந்நிகழ்ச்சியில் முக்கிய பிரமுகர்கள், கோயில் நிர்வாகிகள்,ஊர் பொதுமக்கள், மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் 5000த்திற்கு மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# தொழிற்கடன் வசதியாக்கல் முகாம்

இராமநாதபுரம், டிச.20-
இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, மாவட்ட தொழில் மையம் சார்பில் தொழிற்கடன் வசதியாக்கல் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி தெரிவிக்கையில்,

மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் மகளிரை தொழில் முனைவோராக உயர்த்திடும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் மாவட்ட தொழில் மையம் மூலம் கைவினை கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கத் துடனும், கைவினை கலை ஞர்களை தொழில் முனை வோர் களாக உருவாக்கிடும் நோக்கத்துடனும். கைவினைஞர்களுக்கு கடனுதவி வழங்கும் கலைஞர் கைவினைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தடை யின்றி தொழில் தொடங்க வங்கிகள் மூலமாக கடன் வழங்குவதற்காக இத்தகைய தொழில் கடன் வசதியாக்கல் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றது. எனவே தொழில் தொடங்க விருப்பமுள்ளவர்கள் இத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்தி கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இம்முகாமில் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் மற்றும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 28 பயனாளிகளுக்கு ரூ.167.94 இலட்சம் வங்கி கடன் ஒப்பளிப்பு ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திருமதி. திரிபுரசுந்தரி அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கார்;த்திகேயன் அவர்கள், தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, மற்றும் பாரத மாநில வங்கி, சென்ரல் பேங்க ஆப் இந்தியா, தாய்கோ வங்கி, இண்டஸ்ண்ட் வங்கி மேலாளர்கள் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம், சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவினை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி அறிவுரையின்படி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் ஆகியவைகளின் மூலம் மொத்தம் 72 பயனாளிகளுக்கு ரூபாய் 10.10 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு வகையான உதவித்தொகைக்கான ஆணைகள் மற்றும் நலவாரிய அட்டைகளை வழங்கினார்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமானது, வருகின்ற 20.12.2025 அன்று திருப்பத்தூர் வட்டாரத்திற்குட்பட்ட பூலாங்குறிச்சி, வ.செ.சிவலிங்கம் அரசு கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது

சிவகங்கை, டிச.20-
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2.8.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் புதிய திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழகம் முழுவதும் சுமார் 1,256 உயர்தர மருத்துவ மையங்கள் மூலம் 17 சிறப்பு மருத்துவ துறைகள் வாயிலாக கட்டணமில்லா மருத்துவ சேவைகள் வழங் குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில், வாரத்திற்கு ஒரு முகாம் வீதம் மொத்தம் 39 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வருகின்ற 20.12.2025 ஆம் தேதியன்று திருப்பத்தூர் வட்டாரத்திற்குட்பட்ட பூலாங்குறிச்சி, வ.செ. சிவலிங்கம் அரசு கலைக்கல்லூரியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமானது நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில், ரூபாய் 3 ஆயிரம் மதிப்பீட்டிலான இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் அனைத்தும், பொதுமக்களுக்கு இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், மனநல மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், நுரையீரல் நோய் மருத்துவம், பொது மருத்துவம், இருதய மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், தோல் மருத்துவம், சித்த மருத்துவம், இயன்முறை மருத்துவம், அறுவை சிகிச்சை மருத்துவம், மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுனர்களை கொண்டு, சிறப்பான மருத்துவ சேவைகளும் இம்முகாமின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மருத்துவர்களால் பரிந்துரைக் கப்படுவர்களுக்கு எக்கோ பரிசோதனை (Echocardi- ogram), எக்ஸ்ரே (X-Ray), அலட்ராசவுண்ட ஸ்கேன் (USG), பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் இம்முகாம்களிலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தாய் சேய் நல ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்க ப்படவுள்ளது. அதுமட்டுமன்றி, இம்முக ாம்களின் வாயிலாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனா ளிகளுக்க ான மருத்துவ சான்றித ழ்களும் வழங்கு வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, முகாமிற்கு வருகைபுரியும் பொதுமக்கள் தங்களின் ஆதார் அட்டையின் நகலினை கொண்டு வருதல் அவசியமாகும். மேலும், இம்முகாமில் காப்பீடு அட்டை வேண்டி விண்ணப்பிப்பவர்கள், குடும்ப அட்டை (Smart Card), ஆதார் அட்டை மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் தங்களது ஆண்டு வருமானம் ரூபாய் 1.20 இலட்சத்துக்கு குறைவாக உள்ளதற்கான சான்று ஆகியவைகளை கொண்டு வருதல் வேண்டும்.

இதுபோன்று, உயிர் காக்கும் தரமான மருத்துவ சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டமானது, செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனை பொதுமக்கள் கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை பயன்படுத்திக் கொண்டு, தங்களது உடல்நலத்தினை முறையாக பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மதுரை மாவட்டத்தில் உள்ள 143 கண்மாய்களுக்கு மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக மீன்பாசி குத்தகை விடப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன்குமார் தெரிவித்தார்

மதுரை, டிச.20-
மதுரை மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு விற்பனைத் திட்டத்தின் கீழ் 166 கண்மாய்களுக்கும், மதுரை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் கீழ் 25 கண்மாய்களுக்கும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலமாக மீன்பாசி குத்தகை விடுவதற்கு கடந்த மே 29ஆம் தேதி, ஆகஸ்டு 8ம் தேதி, மற்றும் செப்டம்பர் 22ம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன் மூலம் 48 கண்மாய்கள் குத்தகைக்கு விடப்பட்டன.

இந்த நிலையில் தற்போது தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு விற்பனைத் திட்டத்தின் கீழ் 128 கண்மாய்களுக்கும், மதுரை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் கீழுள்ள 15 கண்மாய்கள் என மொத்தம் 143 கண்மாய்களுக்கு மின்னணு மறுஒப்பந்தப்புள்ளி (e-tender) வாயிலாக மீன்பாசி குத்தகை விடப்படவுள்ளது.

இதன்படி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநரால் மேற்படி 143 கண்மாய்களுக்கான மீன்பிடி உரிமையை 3 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender) வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் கூடுதல் விவரங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் காணலாம். கூடுதல் விவரங்களுக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், பேச்சியம்மன்படித்துறை, சிம்மக்கல், மதுரை625001 என்ற அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெற்ற
## தமிழ் ஆட்சி மொழிச் சட்ட வார விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் துவக்கி வைத்து பேரணியில் கலந்து கொண்டார்

தென்காசி, டிச.20-
பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

தென்காசி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27:121956 ஆம் நாளினை நினைவுகூரும் வகையில் ஒரு வார காலத்திற்கு ஆட்சிமொழிச் சட்ட வாரமாக கொண்டாடப்பட உள்ளது. இவ்வாண்டு ஆட்சிமொழிச் சட்ட வாரம் 17.122025 முதல் 26.12.2025 வரை ஒருவார காலம் நடைபெற உள்ளது.

மேலும், ஆட்சிமொழிச் சட்ட வாரவிழா கொண்டாடுதல் தொடர்பில் 17.12.2025, 18.12.2025 (ம) 22.12.2025 ஆகிய நாட்களில் அரசுப் பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சி, மின்காட்சியுரை, தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதுவதற்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளது. மேலும், தொழிலாளர் துறையுடன் இணைந்து வணிகநிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வலியுறுத்தி வணிகநிறுவன உரிமையாளர்கள் மற்றும் வணிக நிறுவன அமைப்புகளைக் கொண்டு கூட்டம் நடத்தப்படவுள்ளது. இதுதவிர கல்லூரி மாணவ, மாணவிகள் பங்குபெறும் ஆட்சிமொழிப் பட்டிமன்றம், பொதுமக்கள், தமிழ் அமைப்புகளுடன் இணைந்து ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம் நடைபெறும். இதுதவிர, அரசு அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள், கடைகள், உணவகங்கள் ஆகியவற்றில் ஆட்சிமொழிச் சட்ட வாரத்தினை நினைவு கூரும் வகையில் ஒட்டுவில்லைகள் ஒட்டியும், துண்டறிக்கைகள் மற்றும் அனைத்து நிறுவனங்களிலும் தமிழில் பெயர்ப்பலகை அமைப்பது தொடர்பான அரசாணை வழங்கி கொண்டாடப்படும். அதன் அடிப்படையில் ஆட்சிமொழிச் சட்ட வாரவிழாவின் மூன்றாம் நாளான 19:12.2025 இன்று பள்ளி மாணவ மாணவியர்கள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள், தமிழறிஞர்கள். தமிழ் அமைப்புகள், கல்லூரி மாணவர்களுடன் இணைந்து தமிழ் சார்ந்த கிராமிய கலை நிகழ்ச்சிகளுடன் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. இப்பேரணி இ.சி.ஈஅரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலிருந்து தொடங்கி மீண்டும் அதே பள்ளியில் நிறைவடைகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே. கமல் கிஷோர்.இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாளில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் நுண்ணீர் பாசன திட்டத்தின் சொட்டுநீர் பாசனத்திற்கான உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் பார்வை யிட்டார்.



# கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபை பங்குத் தந்தை சந்தன சகாயத்தை காப்பாற்ற கோரி மனு

மதுரை, டிச20-
ஸ்ரீவில்லிபுத்தூர் கத்தோலிக்க திரு இருதய ஆண்டவர் ஆலய கிறிஸ்தவ திருச்சபை பங்குத் தந்தை அருட்பணி சந்தன சகாயம் ஆலய பணி மற்றும் மக்கள் பணியில் கடந்த 4 ஆண்டுகளாக மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறார்,

அந்த சபையை சார்ந்த ஒரு தரப்பினர் பங்குத் தந்தை சந்தன சகாயம் பற்றி பொய்யான பல தகவல்களை பரப்பி வருகின்றனர், அந்த தகவல் அனைத்தும் தவறானது, பங்குத் தந்தை சந்தன சகாயம் எங்கள் திருசபைக்கு பங்குத் தந்தையாக வந்த பிறகுதான் எங்கள் திரு இருதய ஆண்டவர் ஆலயம் மிக சிறப்பாக செயல்படுகிறது, ஆகையால் எங்கள் பங்கு தந்தை மீது தவறான வதந்திகளை பரப்பி வருபவர்களிடம் இருந்து எங்கள் பங்கு தந்தை சந்தன சகாயம் காப்பாற்றுமாறு , பங்கு தந்தை சந்தன சகாயம் ஆதரவாளர் பிரபு, ஜான் ஆகியோர் தலைமையிலும், தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சி சிறுபான்மை பிரிவு மாநில தலைவர் ஜெய் பீம் செபாஸ்டின் ராஜ் முன்னிலையில் மதுரை உயர்மறை பேராயர் இல்லத்தில் உள்ள பேராயர் அந்தோணிசாமி அவர்களிடம் மனு ஒன்றை வழங்கினார்கள், இந்நிகழ்வில் பங்கு தந்தை சந்தன சகாயம் ஆதரவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்,



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண்மை உழவர் நலத்துறையின் தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் கூட்டமிகு சிறுதானியங்கள் சத்து நிறைந்த தானிய பயிர்களான சோளம் கம்பு குதிரைவாலி மற்றும் ராகி பயிர் பயிரிடுவதற்கான விழிப்புணர்வு வாகனப் பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் முருகேசன் உடனிருந்தார்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161